இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்ப கல்வித் துறை

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி

இறுதிப் பரீட்சை

**EPU6332 –** ஒப்பீட்டுக் கல்வி

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி : **12/03/2023** நேரம்: பி.ப 01.30 – பி.ப 03.30

# பகுதி I

1. ஒப்பீட்டுக் கல்வி என்றால் என்ன?

2. நாம் ஏன் ஒப்பீட்டுக் கல்வியை கற்க வேண்டும். உங்கள் பதிலுக்கான மூன்று (03) காரணங்களை எழுதுக?

3. ஒப்பீட்டுக் கல்வியின் மூன்று (03) நோக்கங்களை எழுதுக.

4. ஒப்பீட்டுக் கல்வி பாடத்தின் முக்கிய மாற்றங்கள் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக.

5. சமகால கல்விக்காக ஜார்ஜ் பெரேடேயின் விஞ்ஞான பரிசோதனை முறையைப் பயன்படுத்துவதன் மூலம் அடையக்கூடிய நன்மைகளைக் குறிப்பிடுக.

6. உலகமயமாக்கல் என்றால் என்ன?

7. ஆரம்ப கல்வியின் மூன்று (03) நோக்கங்களை சுருக்கமாக விளக்குக.

8. ஆரம்ப பிரிவு வகுப்பறையில் ஆசிரியர் எதிர்கொள்ளும் ஐந்து (05) பிரச்சினைகளை பட்டியலிடுக.

**(8x5 =** 40 புள்ளிகள்)

## பகுதி – II

9.

i. இலங்கை எவ்வாறு பல்லின சமூகமாக மாறியது என்பதை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

ii. பல் இனத்தவர்களால் நமது நாட்டில் கல்வியில் ஏற்படும் முக்கிய பிரச்சினைகள் என்ன? (08 புள்ளிகள்)

iii. இப் பிரச்சினைகளை தீர்க்க முயற்சித்த சட்டத்தின் **இரண்டு** (02) நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

10.

i. பல் இனச் சமூகமாக காணப்படும் **இரண்டு (02)** நாடுகளைத் தெரிவுசெய்க. இந்த நாடுகளைத் தெரிவுசெய்ததற்கான காரணங்கள் என்ன? (08 புள்ளிகள்

ii. இலங்கை பல்இனச் சமூகம் மற்றும் நீங்கள் கற்றுக்கொண்ட ஏதேனும் பல்இன சமூகமுடைய நாட்டுடன் ஒப்பிட்டு அறிக்கை ஒன்றை எழுதுக. (12 புள்ளிகள்)

11.

i. கல்வியானது சில இனத்தவர்களின் எதிர்மறை எண்ணங்களை மற்றவர்களிடமிருந்து குறைக்கலாம் அல்லது இழிவளவாக்கலாம் என்று நினைக்கிறீர்களா? (10 புள்ளிகள்)

ii. அவ்வாறு ஏற்படுத்துவதாயின், கல்வியில் எவ்வாறான அம்சம் மாற்றப்படல் வேண்டும்? (10 புள்ளிகள்)

12.

i. இலங்கையில் கற்பித்தல் முறைகள் மற்றும் மாணவர் சாதனை நிலைகள் இவற்றுக்கிடையிலான பிரச்சினைகளை கண்டறிந்து விளக்குக. (10 புள்ளிகள்)

ii. ஆசிரியர்களின் தரம், வகுப்பறைகள் மற்றும் பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினைகளை ஆய்வுசெய்து அறிக்கை எழுதுக. (10 புள்ளிகள்)

13.

i. உலகமயமாக்கலின் நேர்மறையான விளைவுகளை **மூன்று** (03) நாடுகளைத் தெரிவுசெய்து பகுப்பாய்வு செய்க. (10 புள்ளிகள்)

ii. உலகமயமாக்கல் கல்வியில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியது மற்றும் உயர் கல்வியில் சர்வதேசமயமாக்கலிற்கு வழிவகுத்தது என்பதை விபரிக்குக. (10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*